**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி - 2017**

---

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் (''வங்கி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்ட 1997 இன் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் 26(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணியின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கி அதிகாரச்சட்டம் மற்றும் பின்னரான திருத்தங்கள் மூலம் வேண்டப்பட்ட தகவல்களை இந்த நிதிக்கூற்றுக்கள் தருகின்றன.

### 2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்ட ஒவ்வொரு விடயங்களுக்கெதிராகவும் சுட்டிக்காட்டப்பட்டவாறு பின்வரும் ஆவணச்சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

| விடயம் | தொகை | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா. | |
| வங்கியிலுள்ள காசு | | |
| - டச்சு வங்கி ஆழ்நிதி | 454,106 | தொடர்புடைய வங்கிகளிலிருந்தான நேரடி உறுதிப்படுத்தல்கள், வங்கிக்கூற்றுக்கள் மற்றும் வங்கி இணக்கக்கூற்றுக்கள் |
| - பீஓசீ, சேகரிப்பு கணக்கு (எம்ஜரீ) | 258,526 | |
| - பீஓசி, கண்டி கிளை | 38,628 | |
| - பீஓசீ, மாத்தளை கிளை | (28,380) | |
| ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மீதிகள் | 93,872,309 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| ஏனைய நிறுவனங்களிடமிருந்தான கடன்கள் | 500,000 | சுது நெலும் நகர்விற்கான உடன்படிக்கை |

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 29,785,012 தொகையான மிகைக் கடன் அறவீடுகள் உரிய வாடிக்கையாளர்களிற்கு தீர்ப்பனவு செய்யப்படாமல் ஒரு வருடத்திற்கு மேலாக ‘‘சம மாதாந்த தவணைக்கட்டண (ஈஎம்ஐ) மிகைக் கணக்கில்’’ காணப்பட்டன.

(ஆ) காசு மற்றும் காசோலை முற்பணங்கள் முறையே 14 நாட்கள் மற்றும் 22 நாட்களினுள் தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய போதிலும், பல்வேறு நோக்கங்களிற்காக வங்கியால் வழங்கப்பட்ட முறையே ரூபா 470,600 மற்றும் ரூபா 6,008,747 அவ்வாறான முற்பணங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவுசெய்யப்பட்டிருக்காததுடன், அந்த முற்பணங்களின் நிலுவைக் காலப்பகுதி முறையே 23 - 278 நாட்கள் மற்றும் 17 - 181 நாட்கள் வரையான வீச்சில் காணப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் பொதுப் பேரேட்டில் உள்ளவாறான பங்கிலாப கணக்கு மற்றும் ஆதன ஏல கணக்கின் மீது பெறப்பட்ட முற்பணத்தில் தோற்றமளித்த முறையே ரூபா 4,567,738 மற்றும் ரூபா 2,238,028 நீண்டகால நிலுவையாகவுள்ள மீதிகளினை தீர்ப்பனவுசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளினை வங்கி எடுத்திருக்கவில்லை.

(ஈ) அரச கடன் வட்டி பெயரளவு கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி (ஜீ/எல் கணக்கு 1420100004) ஆண்டின் இறுதியில் பூச்சியமாகக் காணப்படவேண்டிய போதிலும், அந்தக் கணக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,238,545 நிதியொன்று காணப்பட்டது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் IV ஆம் பகுதியின் 16(2) ஆம் பிரிவு | வங்கியின் விநியோகிக்கப்பட்ட மூலதனம் ரூபா 1,000 மில்லியனாகக் காணப்படல்வேண்டும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 962,092,936 ஆகக் காணப்பட்டது. |
| (ஆ) நிதித்துறைகளின் ஒன்றிணைப்பு மீது பிரதான திட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை மத்திய வங்கியினால் (சீபீஎஸ்எல்) விநியோகிக்கப்பட்ட 2014 சனவரி 17 இன் 02/17/402/0073/002 ஆம் இலக்க வழிகாட்டல். | வங்கி 2018 சனவரி 01 இல் உள்ளவாறான அதன் மையப்பாக மூலதன மீதியாக ரூபா 5,000 மில்லியனை பேண வேண்டிய போதிலும், இந்த தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசின் நிதிப்பிரமாணம் (எவ்ஆர்) | |
| - எவ்ஆர் 396(ஈ) | விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களினை விட அதிகமாக காசாக்கப்படாமல் காசோலையொன்று தொடர்ந்தும் காணப்படுமாக இருந்தால், அந்தக் காசோலை செலுத்தப்படாதது என வங்கியிடமிருந்து உறுதிப்படுத்தல் பெறப்படவேண்டியதுடன் இரத்துச் செய்யப்பட்ட காசோலையாக கருதப்பட வேண்டியதுடன் பொருத்தமாக ஏடுகளில் அறிக்கையிடப்படும். எவ்வாறாயினும், வங்கி இதனுடன் இணங்கியிருக்காததுடன் அந்தக் காசோலைகள் காசாக்கப்படாத காசோலைகளாக 2017 திசெம்பர் மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றில் தோற்றமளித்திருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 இன் பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகள் | |
| | (i) 5.2.4 ஆம் பிரிவு | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக வரைபுப் பாதீடு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு 2016 திசெம்பர் 20 இல் மாத்திரம் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| | (ii) 9.2(ஆ) மற்றும் (ஈ) பிரிவுகள் | நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருடன் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு வரைபடத்தை கொண்டிருக்க வேண்டியதுடன் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தில் அது பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், வங்கி இந்த ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்கவில்லை. |
| | (iii) 9.3.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டத்தை ஒவ்வொரு தொழில்முயற்சியும் கொண்டிருக்க வேண்டியதுடன், இது சபை மற்றும் பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், வங்கியில் அத்தகைய திட்டமெதுவும் காணப்படவில்லை. |
| (உ) | 2016 ஒக்தோபர் 27 இன் 1/2015(i) ஆம் இலக்க மற்றும் 2015 மே 25 இன் 01/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | (i) அலுவலக வாகனமொன்றிற்கு உரித்துடையவராகக் காணப்படும் உத்தியோகத்தரொருவர் அலுவலக வாகனத்தினைப் பயன்படுத்துவதற்கு அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்துப் படிக்குரிய பயன்பாட்டுடன் அந்தப் பதவிக்குரிய மாதாந்த எரிபொருள் படியினைப் பெறுவதற்கு தெரிவினைக் கொண்டுள்ளார். எவ்வாறாயினும், அதற்கு முரணாக, மனித வளங்கள் மற்றும் ஊதியங்கள் குழுவினால் அளிக்கப்பட்ட உள்வாரியான அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த தகுதியான உத்தியோகத்தர்களுக்கு ரூபா 300,000 இனை வங்கி அதிகப்படியாக செலுத்தியிருந்தது. |
| | | (ii) சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அலுவலக வாகனங்களுக்கு உரித்துடைய மூன்று உத்தியோகத்தர்களுக்கு வாகன படிகளுக்கும் மேலாக வருடாந்தம் ரூபா 540,000 சாரதிப் படியினை வங்கி செலுத்தியிருந்தது. |
| | | (iii) வாகனப் படிகளுக்கு உரித்துடைய |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு பராமரிப்புக் கிரயத்தின் செலுத்துகைக்கு எவ்வித அங்கீகாரமும் வழங்கக்கூடாத போதிலும், மீளாய்வாண்டின்போது பாமரிப்புக் கிரயமொன்றாக ஒன்பது உத்தியோகத்தர்களுக்கு ரூபா 450,000 தொகையினை வங்கி செலுத்தியிருந்தது. மேலும், சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பதின்நான்கு உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் படிக்கும் மேலதிகமாக ரூபா 1,548,791 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | அரசாங்க பெறுகை வழிகாட்டி மற்றும் 2009 யூன் 4 ஆம் திகதிய பிஎவ்/429(i) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | வங்கி பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் அதன் பெறுகை நோக்கங்களிற்காக விஷேட கொள்வனவுக் கைநூலொன்றைப் பயன்படுத்துகின்றதுடன், அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றுவதற்குப் பதிலாக இந்த அங்கீகரிக்கப்படாத கைநூலை அடிப்படையாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 74 மில்லியன் பெறுமதியான 1,311 வகைகளினை வங்கி கொள்வனவு செய்திருந்தது. |
| (எ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 133 ஆம் பிரிவு மற்றும் அவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் | (i) தனியாள்கள் மற்றும் கம்பனிகளுக்கு பிரடித்துவைத்தல் வரியின் விகிதங்களாக முறையே 2.5 சதவீதம் மற்றும் 10 சதவீதங்களினைப் பிரயோகிப்பதற்குப் பதிலாக, ஏற்பாடுகளினை மீறி தனிநபர்களுக்கு 8 சதவீதத்தினையும் மற்றும் கம்பனிகளுக்கு 2.5 சதவீதம் மற்றும் 8 சதவீதத்தினை வங்கி பிரயோகித்திருந்தது.<br><br>(ii) மாதாந்தம் ஐந்து ஆயிரம் ரூபாவினை விடக்குறைந்த வட்டி செலுத்தப்பட்ட அனைத்து கணக்குகளின் வட்டியிலிருந்தும் வங்கி வருமான வரியினைக் கழித்திருந்தது. |
| (ஏ) | 2006 ஒக்தோபர் 05 ஆம் திகதிய 1465/19 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் (அதிவிஷேட) 10(ஆ) பந்தி | 2015 யூலை 01 தொடக்கம் 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது ஊழியர்களின் ஊதியத்திலிருந்து ரூபா 397,425 பெறுமதியான முத்திரைத் தீர்வை சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், அது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2006 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1465/20 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் 19 ஆம் பிரிவு மற்றும் 2008 சனவரி 01 ஆந் திகதிய 1530/13 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் 10 ஆம் பிரிவு | (i) வங்கி ஏதேனும் பணம் அல்லது ஆதனத்திற்கு வழங்கப்பட்ட ஏதேனும் பெறுகை அல்லது வெளியேற்றத்திற்கு முத்திரைக் கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், முத்திரைக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட ரூபா 2,137,332 இனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு வங்கி தவறியிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) | 2015 யூலை 01 இலிருந்து 2017 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது கடன் வசதிகளினை அளிக்கும் நேரத்தில் வாடிக்கையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 1,739,907 முத்திரைக் கட்டணத்தினை வங்கி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (ஒ) | வங்கியின் கடன் அறவீட்டுக் கைநூல் | |
| | (i) 4.1.1 ஆம் பிரிவு | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கையளிக்கப்பட்ட ஆதனங்களின் நிலுவையாகவுள்ள மூலதனப் பெறுமதி ரூபா 22,246,905 ஆக காணப்பட்டது. அதில் ரூபா 10,927,479 இற்கு சமமான கையளிக்கப்பட்ட ஆதனங்களின் 50 சதவீதம் பத்து ஆண்டுகளிற்கு மேலாக தொடர்ந்தும் காணப்பட்டன. |
| | (ii) 4.1.5 ஆம் பிரிவு | கையளிக்கப்பட்ட ஆதனங்களின் மீள்மதிப்பீடு உள்ளக மதிப்பீட்டாளர் ஒருவரால் ஆகக்குறைந்தது 2 ஆண்டுகளிற்கு ஒருமுறை அல்லது வெளியிலுள்ள மதிப்பீட்டாளர் ஒருவரால் 4 ஆண்டுகளிற்கு ஒருமுறை செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 6,311,250 தொகையான கையளிக்கப்பட்ட ஆதனங்கள் வேண்டப்பட்டவாறு மீள்மதிப்பீடு செய்யப்படாமல் 2 - 6 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்தும் காணப்பட்டன. |
| | (iii) 3.4.7 ஆம் பிரிவு | கையளிக்கப்பட்ட ஆதனங்களை ஏலமிடுதல் மூலம் சேகரிக்கப்பட்ட மிகைப் பணம் உரிய வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறான மிகைப் பணம் ரூபா 1,294,630 தொகை மீளாய்வாண்டின் போது வங்கியால் தொடர்புடைய 10 வாடிக்கையாளர்களிற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | ஆலோசனை வழிகாட்டல்கள் 2007 இன் 4.3 ஆம் வழிகாட்டி | ஒரு வருட காலப்பகுதியினை மிகைத்த ஆலோசனைச் சேவைகள் தேசிய செய்தித்தாளில் விளம்பரப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், இந்த வழிகாட்டலுடன் வங்கி இணங்கியிருக்கவில்லை. |
| (ஔ) | 2017/03/01 ஆந் திகதிய ஜீசீஎல்/2017/225 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கை | பொதுமுறையான மற்றும் பொதுப் பேரேட்டுக் கணக்குகள் நாள் இறுதியில் பூச்சியமாகக் காணப்படல் வேண்டும். எவ்வாறாயினும், Inter System GL CBS LMS இன் பொதுப் பேரேடு (பொதுப் பேரேட்டு இலக்கம் 1600100001) மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சேகரிப்புக் கணக்கு (பொதுப் பேரேட்டு இலக்கம் 1330100003) 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பூச்சியமாகக் காணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 660 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 557 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 103 மில்லியன் அல்லது 16 சதவீத பற்றாக்குறையொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. வட்டிச் செலவினங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் மீளாய்வாண்டில் வட்டி வருமானத்தில் அதிகரிப்புக்கு எதிராக ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் குறைவு என்பன இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமான காரணங்களாக தாக்கமளித்திருந்தது.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | **2017** | **2016 (மீளக் குறிப்பிடப்பட்டது)** | **முரண் {சாதகமானது /(பாதகமானது)}** |
|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **சதவீதம்** |
| வட்டி வருமானம் | 6,613 | 5,472 | 21 |
| வட்டிச் செலவினம் | (4,742) | (3,509) | (35) |
| **தேறிய வட்டி வருமானம்** | **1,871** | **1,963** | **(4)** |
| தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 353 | 347 | 2 |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறியது) | 12 | 108 | (89) |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | **2,236** | **2,418** | **(7)** |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான நாட்டக்கழிவு அறவீடுகள் | 25 | (160) | 115 |
| **தேறிய செயற்பாட்டு வருமானம்** | **2,261** | **2,258** | **0.13** |
| பதவியணியினர் கிரயம் | 941 | 896 | (5) |
| ஏனைய செலவினங்கள் | 531 | 514 | (3) |
| **பெறுமதிசேர் வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **789** | **848** | **(7)** |
| பெறுமதிசேர் வரி மீதான நிதிசார் சேவைகள் | 232 | 188 | (23) |
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | **557** | **660** | **(16)** |
| வரிச் செலவினங்கள் | 149 | 177 | 16 |
| **ஆண்டிற்கான இலாபம்** | **408** | **483** | **(15)** |

### 3.2 வங்கியின் பெறுமதி சேர்க்கை

மீளாய்வாண்டின் போது வங்கியின் தொழிற்பாடுகள் ரூபா 408 மில்லியன் இலாபமொன்றை விளைவித்திருந்த போதிலும், பெறுமானத்தேய்வுகள், பதவியணியினர் கிரயம் மற்றும் அரசுக்குச் செலுத்தப்பட்ட வரியினை கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டின்போதான நாட்டிற்கான வங்கியின் பங்களிப்பு ரூபா 1,423 மில்லியனாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் அது ரூபா 1,345 மில்லியனாகக் காணப்பட்டது. ஆகையினால், வங்கியின் பெறுமதி சேர்க்கை மீளாய்வாண்டில் ரூபா 78 மில்லியனால் அதிகரித்திருந்தது.

## 3.3 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

### முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான வங்கியின் கணக்கீட்டு விகிதங்கள் தொடர்பில் சில முக்கியமான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கு 5.85 சதவீதமாக அறிக்கையிடப்பட்ட வங்கியின் தேறிய இலாப விகிதம் துறைசார் விகிதம் 8.24 சதவீதத்தைவிடக் குறைவாகக் காணப்பட்டது.

(ஆ) சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் சராசரியாக 1 சவீதமாகக் காணப்பட்ட துறையுடன் ஒப்பிடுகையில் 0.86 சதவீதத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21.82 சதவீதத்தினால் அது குறைவடைந்திருந்தது.

(இ) பங்குதாரர் நிதிகளுக்கான சராசரி திரும்பல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 24 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பங்கொன்றின் உழைப்பு மற்றும் பங்கொன்றின் சந்தைப் பெறுமதி முறையே 15 சதவீதம் மற்றும் 31 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(உ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளுக்கான வங்கியின் உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் பின்வருமாறு காணப்பட்டது.

| | 2017 ரூபா. மில்லியன் | 2016 ரூபா. மில்லியன் | 2015 ரூபா. மில்லியன் | 2014 ரூபா. மில்லியன் | 2013 ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|---|
| மொத்தக் கடன்கள் | 7,917 | 8,863 | 9,037 | 6,213 | 5,257 |
| பங்குதாரர் நிதிகள் | 4,200 | 3,821 | 3,364 | 2,886 | 2,575 |
| உரிமை மூலதனத்திற்கான கடன் விகிதம் | 1.88 | 2.32 | 2.69 | 2.15 | 2.04 |

2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கியின் மொத்தம் கடன்பெறுதல்கள் முன்னைய ஆண்டினைவிட 11 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்திருந்ததுடன் அதன் விளைவொன்றாக பங்குதாரர் நிதி 9.92 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் நோக்கங்களினை அடைந்துகொள்ளும்பொருட்டு 2017 - 2020 காலப்பகுதிக்கு கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர் வைப்புக்கள், கடன்கள் மற்றும் முற்பணங்கள், தேறிய வட்டி வருமானம் மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் தொடர்பில் இலக்கிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான

அடைதல்களுக்குமிடையே 2 சதவீதம் தொடக்கம் 51 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடயம் | கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் இலக்கு | உள்ளபடியானது | முரண்கள் {சாதகமானது /(பாதகமானது)} |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | சதவீதம் |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 36,000 | 36,655 | 1.82 |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 34,200 | 34,970 | 2.25 |
| தேறிய வட்டி வருமானம் | 2,466 | 1,872 | (24) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1,144 | 557 | (51) |

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம், கிளை வலையமைப்புக்களினை 45 கிளைகள் வரை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் போது எவ்வித கிளையும் திறக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 39 கிளைகளும் தொடர்ந்தும் காணப்பட்டது.

**4.1.2 செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் (என்பீஎல்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி ரூபா 35,737 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அந்த திகதியில் உள்ளவாறான செயற்பாடற்ற கடன்கன் மற்றும் முற்பணங்கள் மொத்த நிலுவையாகவுள்ள கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதியில் ரூபா 6,384 மில்லியன் அல்லது 18.47 சதவீதமாகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், அது 2016 மற்றும் 2015 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே 17.58 சதவீதம் மற்றும் 22.57 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) 18.47 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த செயலற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் விகிதம் 4.5 சதவீதமாகக் காணப்படும் துறைசார் விகிதத்தைவிட குறிப்பிடத்தக்களவு உயர்வாகக் காணப்படுகின்றது.

(இ) 2017 ஆம் ஆண்டின்போது அளிக்கப்பட்ட ரூபா 742,174,640 பெறுமதியுடைய 2012 கடன்கள் செயலற்ற வகைக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மொத்த மூலதன நிலுவை ரூபா 727,472,766 ஆகக் காணப்பட்டது.

**4.1.3 ஊழியர் சேமலாப நிதிக்கு (ஈபிஎவ்) எதிராக அளிக்கப்பட்ட கடன்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான ஊழியர் சேமலாப நிதிக்கு எதிராக அளிக்கப்பட்ட மொத்த நிலுவையாகவுள்ள கடன்கள் ரூபா 9,512,770,575 ஆகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 4,154,617,827 தொகையொன்று செயலற்ற கடன்களாக கருதப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிலுவையில் 43.67 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஆ) ரூபா 45,544,434 தொகையான ஈபிஎவ் கடன்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 மாதங்களினை விடவும் அதிகமாக நிலுவையில் காணப்பட்டது. ஈபிஎவ் பங்களிப்பாளர்களிடமிருந்து அந்தக் கடன்களினை அறவிடுவதற்கு சாத்தியமொன்று காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தக் கடன் மீதிகளினை அறவிடுவதற்கு எவ்வித திருப்திகரமான நடவடிக்கையினையும் வங்கி எடுத்திருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அறவிடப்படவேண்டிய ரூபா 2,123,624 மீதிக்கு எதிராக உறுதியாக அழிக்கப்பட்ட ஆதங்களினை விற்பனை செய்வதன் மூலம் ரூபா 705,356 நட்டமொன்று வங்கிக்கு ஏற்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு ரூபா 1,069,505 விளம்பர செலவினத்தை ஏற்படுத்துவதன் மூலம் வீட்டுக் கடன்களினை வங்கி விளம்பரப்படுத்தியிருந்தது. எவ்வாறாயினும், அது தொடர்பில் எவ்வித கிரய நலன் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் எவ்வித செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) 15,404 நிலையான வைப்புக்களுக்கு சாதாரணமான வட்டி விகிதத்துடன் ஒப்பிடுகையில் உயர் வட்டி விகிதத்தினை அளித்ததன் காரணமாக மீளாய்வாண்டின்போது ரூபா 110,231,835 மேலதிக வட்டி செலவினம் ஏற்பட்டது.

(ஈ) உயர் கிரய நிலையான வைப்புக்கள் மற்றும் ஒரு வருடத்திற்குக் குறைந்த முதிர்ச்சிக்காலத்துடனான வைப்புக்களின் மீது வங்கி அதிகளவில் சார்ந்து காணப்படுகின்றது. வங்கியின் மொத்த வைப்புக்களில், 84 சதவீதம் நிலையான வைப்புக்களினை உள்ளடக்கிக் காணப்பட்டது.

(உ) முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வங்கியின் வெளிவாரியான தரப்படுத்தல் குறிப்பிடத்தக்களவு பின்னடைவாக காணப்பட்டது. பிட்ச் (Fitch) தரப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம், வங்கியின் உறுதியான தேசிய நீண்டகால தரப்படுத்தல் 2016 ஆம் ஆண்டில் BBB(lka) நிலையானதிலிருந்து 2017 ஆம் ஆண்டில் BBB(lka) எதிர்மறைவிற்கு பின்னடைந்து காணப்பட்டிருந்தது.

(ஊ) பிரதிலாப (Prathilaba) சேமிப்பு கணக்குகள் மற்றும் பெருநிறுவன (Corporate) நிலையான வைப்புக்களின் (தலைமை அலுவலகம்) திரண்டவளர்ச்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் முறையே 6.2 சதவீதம் மற்றும் 60.81 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------------------------------------------------

2016 ஏப்ரல் 29 இன் பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கு முரணாக தொடர்புடைய ஊழியர்களின் தனிநபர் ஊதியங்களிலிருந்து அதனை கழிப்பனவு செய்திராது ரூபா 21,192,035 தொகையான அதன் ஊழியர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) வங்கியினால் தாங்கிக்கொள்ளப்பட்டது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 செப்தம்பரில் வங்கியின் மனிதவள செயன்முறையினை முன்னேற்றுவதற்கு ஆலோசனையாளர் - மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் நிர்வாகம் பதவிக்கு நபர் ஒருவர் ஆட்சேர்ப்புச்செய்யப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், நியமனக்கடிதத்தில்

விபரிக்கப்பட்ட கடமைகளினை செயற்படுத்துவதற்கு அவர்க்கு முடியாதுகாணப்பட்டதுடன், 2016 செப்தம்பர் தொடக்கம் 2018 மார்ச் வரை அவர்க்கு ஆலோசனைக் கட்டணமாக ரூபா 3,830,000 இனை வங்கி செலுத்தியிருந்தது.

(ஆ) வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியிடமிருந்து பாதுகாப்பு வைப்பொன்றை பெற்றுக்கொள்ளாது மீள்நிதியிடல் கடன் வசதியொன்றை வங்கி வழங்கியிருந்தது. மேலும், மேற்குறித்த கடன் வசதி தொடர்பில் 2017 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 731,385 பெறவேண்டிய வட்டியினை அறவிடுவதற்கு வங்கி தவறியிருந்தது.

## 4.5 சந்தைப் பங்கு

கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் மொத்த வைப்புக்களின் அடிப்படையில் வங்கியின் சந்தைப் பங்கு கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் அடிப்படையில்

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| வங்கியின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா.மில்லியன்) | 35,737 | 31,052 | 27,316 | 23,899 | 20,112 |
| சந்தையின் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் (ரூபா.மில்லியன்) | 639,706 | 533,230 | 456,961 | 440,670 | 347,117 |
| வங்கியின் சந்தைப் பங்கு (சதவீதம்) | 5.59% | 5.82% | 5.98% | 5.42% | 5.79% |

### (ஆ) வைப்புக்களின் அடிப்படையில் சந்தைப் பங்கு

| | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
| வங்கியின் மொத்த வைப்புக்கள் (ரூபா.மில்லியன்) | 36,655 | 32,123 | 28,593 | 24,479 | 18,902 |
| சந்தையின் மொத்த வைப்புக்கள் (ரூபா.மில்லியன்) | 974,574 | 846,146 | 764,155 | 709,671 | 617,081 |
| வங்கியின் சந்தைப் பங்கு (சதவீதம்) | 3.76% | 3.78% | 3.74% | 3.45% | 3.06% |

## 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலுடன் இணங்கியதாக வங்கியின் பரப்பெல்லையுடன் தொடர்புபட்டுக் காணப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்வதற்கான அளவிடை கட்டளை விதிகளினை இனங்கண்டு அபிவிருத்தி செய்வதற்கு வங்கி தவறியிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தொகைகளுக்கிடையே 10 சதவீதம் முதல் 121 சதவீதம் வரையிலான வீச்சில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது வங்கியின் வினைத்திறனானதொரு உள்ளகக்கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் வங்கியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | **அவதானிப்புக்கள்** |
| --- | --- |
| சொத்து முகாமைத்துவம் | - அம்பாறையிலுள்ள காணியொன்று கொடுக்கல் வாங்கலின் பொருளினை கருத்திற்கொள்ளாது செயற்பாட்டுக் குத்தகையாக இனங்காணப்பட்டது. |
| | - நிலையான சொத்துக்கள் முறைமை குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களினை உள்ளடக்குவதற்கு வசதியளிக்கக்கூடியதாகக் காணப்படவில்லை. |
| | - ரூபா 1,379,229 தொகையான கணனி உபகரணம் அல்லது தகவல் தொடர்பாடல் களஞ்சியத்தின் (IT Stores) மொத்தச் சொத்துக்களில் 46 சதவீதம் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. |
| | - ரூபா 275,545 தொகையான அலுவலக உபகரணங்கள் அல்லது மொத்தச் சொத்துக்களில் 40 சதவீதம் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. |
| | - கிளைகளிலிருந்து / கிளைகளுக்கான நிலையான சொத்துக்களின் நகர்வு பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| | - நிலையான சொத்துக்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டபோதிலும், சில சொத்துக்கள் கிளைகளில் பௌதீக ரீதியில் காணப்படவில்லை. |
| | - கொள்வனவுத் திகதியினை கருத்திற் கொண்டிராது சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டுக் காணப்பட்டது. |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் மீதான கட்டுப்பாடு | - வாடிக்கையாளர் குறியீட்டு உருவாக்கம் மற்றும் அங்கீகாரமளித்தல் பகிர்ந்தளிக்கப்பட்டுக் காணப்படாமை. |

- சில ‘‘பிரதிலாப’’ சேமிப்புக் கணக்குகள் ஆரம்ப வைப்பொன்றுடன் திறக்கப்பட்டுக் காணப்படாமை.

| | | |
|---|---|---|
| தன்னியக்க இயந்திரங்களிலிருந்து மீளப்பெறுதல் | - | தன்னியக்க இயந்திரங்களினூடாக ஏனைய வங்கிகளின் பண மீளப்பெறுதலுக்கான அதிகுறைந்த மீதி வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. |
| கணக்கீடு | - | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மற்றும் 2016/2017 ஆம் ஆண்டிற்கான வருமான வரி கணிப்பீட்டின் பிரகாரம் முதலீட்டு ஆதன மீள்மதிப்பீட்டு மிகைகளுக்கிடையே ரூபா 3,289,295 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. |
| | - | 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிசார் சேவைகள் கணக்கு மீது பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியில் முறையே ரூபா 1,371,599 குறை ஏற்பாடும் ரூபா 1,143,360 மிகை ஏற்பாடும் அவதானிக்கப்பட்டது. |